**செய்தி வெளியீடு எண்: 555** **நாள்: 29.07.2020**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>கொரோனா தொற்றிலிருந்து மாணாக்கர்களை பாதுகாக்க, தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கு இணையதளம் மூலம் சான்றிதழ் பதிவேற்றம் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பு செய்தல் குறித்த பத்திரிக்கைச் செய்தி</u>**

**அனைவருக்கும் வணக்கம் !**

தமிழ்நாடு பொறியியல் மாணாக்கர்கள் சேர்க்கைக்கான விண்ணப்ப பதிவு www.tneaonline.org என்ற இணையதளம் வாயிலாக **15–07–2020** அன்று ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. விண்ணப்ப பதிவிற்கான கடைசி நாள் **16–08–2020** ஆகும். இதுநாள் வரை **1,21,008** மாணாக்கர்கள் இணையதளம் வாயிலாக விண்ணப்பப்பதிவு செய்துள்ளனர். அதில் **93,383** மாணாக்கர்கள் இணையதள வாயிலாக தங்களது பதிவு கட்டணத்தை செலுத்தியுள்ளனர்.

மேலும் இது நாள் வரை, **1,768** மாணாக்கர்களுக்கு தொலைபேசி மூலமும், **4,556** மாணாக்கர்களுக்கு மின்னஞ்சல் மூலமாகவும் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை **2020** (TNEA-2020) தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் **2019–ம்** ஆண்டின் தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான விண்ணப்பப்பதிவு இணையதளம் வாயிலாக நடைபெற்று, சான்றிதழ் சரிபார்ப்பு மேற்கொள்வதற்காக மாணாக்கர்கள் TFC மையங்களுக்கு நேரடியாக வரவேண்டிய சூழ்நிலை இருந்தது.

இம்முறை, கொரோனா தொற்றிலிருந்து மாணாக்கர்களை பாதுகாக்க ஏதுவாக, தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கு, இணையதளம் மூலம் சான்றிதழ் பதிவேற்றம் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த சான்றிதழ் பதிவேற்றம் வரும் **31.07.2020** முதல் **20.08.2020** வரை நடைபெற உள்ளது. மாணாக்கர்கள் தங்களுக்கென ஒதுக்கப்பட்ட நாட்களில் அவர்களின்

கைப்பேசி அல்லது கணினி மூலம் வீட்டிலிருந்தபடியே சான்றிதழ்களை www.tneaonline.org இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பப்பதிவு வரிசை எண்களின் அடிப்படையில், இரண்டு நாட்களில் 20,000 மாணாக்கர்கள் வீதம், சான்றிதழ்கள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் வகையில் அட்டவணை கொடுக்கப்பட்டுள்ளது.

சான்றிதழ் பதிவேற்றத்திற்கான அட்டவணை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :

| வ. எண் | நாள் | | மாணாக்கர்களுக்கு TNEA இணைய தளத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள விண்ணப்பப்பதிவு எண் | |
|---|---|---|---|---|
| | முதல் | முடிய | முதல் | முடிய |
| 1 | 31.07.2020 | 01.08.2020 | 200001 | 220000 |
| 2 | 02.08.2020 | 03.08.2020 | 220001 | 240000 |
| 3 | 04.08.2020 | 05.08.2020 | 240001 | 260000 |
| 4 | 06.08.2020 | 07.08.2020 | 260001 | 280000 |
| 5 | 08.08.2020 | 09.08.2020 | 280001 | 300000 |
| 6 | 10.08.2020 | 11.08.2020 | 300001 | 320000 |
| 7 | 12.08.2020 | 20.08.2020 | விடுபட்ட மாணாக்கர்கள் சான்றிதழ் பதிவேற்றம் செய்து கொள்ள வேண்டிய நாட்கள் | |

மேலும், மாணாக்கர்கள் அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட நாட்களில் சான்றிதழ் பதிவேற்றம் செய்துகொள்ள முடியாதவர்கள் 12.08.2020 முதல் 20.08.2020 வரை தங்களின் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருப்பின் 044–22351014, 22351015 என்ற தொலைபேசி எண்களில் தெரிவிக்கலாம்.

மாணாக்கர்கள், பதிவேற்றம் செய்வதற்கு முன்பாக, தங்களது சான்றிதழ்களை Digital Format-ஆக மாற்றுவது மற்றும் அவர்களது புகைப்படம்

மற்றும் கையொப்பம் போன்றவற்றை Image Format-ஆக மாற்றுவது குறித்த வழிமுறைகள் அவர்களுக்கு எளிதில் புரியும் வகையில் "**instructions**" மூலமாகவும் மற்றும் வீடியோ மூலமாகவும் www.tneaonline.org இணையதள முகவரியில் கொடுக்கப்பட்டுள்ளது.

TNEA இணையதளத்தில் பதிவேற்றப்பட்ட சான்றிதழ்களை அனுபவம் வாய்ந்த பேராசிரியர்கள் மூலம் அந்தந்த TFC மையங்களில் 24.08.2020 முதல் 01.09.2020 வரை சரிபார்க்கப்படும். மாணாக்கர்கள் நேரில் வரவேண்டிய அவசியமில்லை. சான்றிதழ் சரிபார்ப்பு பணிமுடிவடைந்ததும் Rank பட்டியல் தயாரிக்கப்பட்டு மாணாக்கர்களின் பார்வைக்கு www.tneaonline.org இணையதள முகவரியில் தெரிவிக்கப்படும்.

**கே.பி. அன்பழகன்**
**உயர்கல்வித் துறை அமைச்சர்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**